மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 15 வெள்ளிக்கிழமை 01.09.2023 அதிர்வு 32

# குழு மோதலில் ஒருவர் மரணம்

## இருவர் படுகாயம்

இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் இருவர் படுகாய 04

# பிரபாகரனை பிக்குகள்தான் உருவாக்கினர்

## உண்மையை உரைக்கிறார் மைத்திரி



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப்பிக்குகளே உருவாக்கினர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியு மான மைத்திரிபால சிறி சேன தெரிவித்தார். 04

# QR முறை இன்றுடன் நிறுத்தம்

எரிபொருள் விநியோகத்துக்காக அறிமுகம் செய்யப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பின்பற்றப் பட்டு வந்த ஐசு முறை இன்று முதல் நிறுத்தப்படுவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

# பஸ் கட்டணங்களும் நாளை முதல் உயரும்

எரிபொருள் விலையுயர்வை அடுத்து நாளை சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் நான்கு வீதத்தினால் அதி-கரிக்கப்படவுள்ளன என பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 35 ரூபாவினால் நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பஸ் கட்டணங்கள்

# துன்புறுத்தலுக்கு உள்ளான சரஸ்வதி நாடு திரும்பினார்

சவூதி அரேபியாவுக்கு வீட்டு பணிப்பெண்ணாகச் சென்றிருந்த நிலையில், அங்கு கடுமையான துன்புறுத் தல்களுக்கு உள்ளானார் எனக் கூறப்படும் மலையகப் பெண்ணான சரஸ்வதி புஷ்பராஜ், இன்று காலை நாடு திரும்பினார். 04

# கெஹலியவின் தலை தப்புமா?

## பிரேரணைக்குத் திகதி குறிப்பு



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவுக்கு எதிரான நம்பிக்கையில் லாப் பிரேரணை எதிர்வரும் 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் 03

# இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலுக்குப் போர்க்கொடி!

## யாழ். மாவட்ட செயலகம் முன்பாக மீனவர்கள் போராட்டம்



(என்.புவியரசன்)

இந்திய இழுவைப் படகுகளின் அத்து மீறலை எதிர்த்து யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் 04

# உடைந்தது கடற்படை பாலம் 19 பேர் வைத்தியசாலையில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



திருகோணமலையிலிருந்து துறைமுகத் தைப்பார்வையிடச்சென்ற கடற்படைக்குச் சொந்தமான பாலம் (ஜெட்டி ) இரண்டாக உடைந்ததால் அதில் பயணம் செய்த 19 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் 04

# அரச காணியை இரகசியமாகத் துப்பரவு செய்தவர்கள் இராணுவம் – பொலிஸாரைக் கண்டதும் தப்பியோட்டம்

- என்.புவியரசன் -

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோவில் குளம் பகுதியில் சுமார் 15 ஏக்கர் அரச காணியைச் சட்டவிரோதமான முறையில் இனந்தெரியாத நபர்கள் நேற்றிரவு ஜே.சி.பி. இயந்திரங்களைப் பயன்படுத்தித்துப்பரவுசெய்தநிலையில்,பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் 04








# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேராளர் மாநாடு இன்று யாழில்!

(எஸ்.நிதர்ஷன்)

'தரமான கல்வியை உறுதி செய்து உரிமைகளை வென்றெடுப்போம்!' – எனும் தொனிப் பொருளில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு யாழில் இன்று நடைபெற்றது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த மாநாடு பெருமளவிலான அதிபர் ஆசிரியர்களின் பங்குபற்றலுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஆசிரியர் உரிமைகளுக்காக செயற்பட்டு உயிரிழந்த சக ஆசிரியர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. கடந்த காலங்களில் ஆசிரியர்கள் முன்னெடுத்த போராட்டங்களும் இணையவழியில் காட்சிப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த கால செயற்பாடுகள் மற்றும் அறிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்து சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்த மாநாட்டில் மத்த் தலைவர்கள் மற்றும் ஆசிரியர் சங்க தலைவர், செயலாளர் உள்ளிட்ட சங்கத்தின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் எனப் பலரும் நாடுமுழுவதிலும் இருந்து வருகை தந்து கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பூசகரிடம் கொள்ளை

ஆலயத்தில் பூஜையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பூசகரை வழிமறித்து வாள் முனையில் கொள்ளை கும்பல் ஒன்று வழிப்பறியில் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் பகுதியில் புதன் கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூசகர் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை அவரை வீதியில் வழிமறித்த மூவர் அடங்கிய கொள்ளை கும்பல் ஒன்று, அவரை வாள் முனையில் அச்சுறுத்தி அவரிடம் இருந்த ஒரு தொகைப் பணத்தைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கன்னியாவில் பஸ்கள் மோதி விபத்து; மூவர் காயம்

திருகோணமலை – ஹொரவ பொத்தான பிரதான வீதி கன்னியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இன்று காலை 11.30 மணியளவில் இவ் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னாரிலிருந்து திருகோணமலை நோக்கி சென்ற அரச பஸ் சுற்றுலா வந்த பஸ் ஒன்றுடன் மோதியில் இந்த விபத்த இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் கம்பஹா பிரதேசத்தில் இருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகள் மூவர் காயமடைந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை உப்புவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# மன்னாரில் தனிநாயகம் அடிகளாரின் 43 ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு



**(மன்னார் நிருபர்)**

தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 43 ஆவது நினைவு தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை (01) முற்பகல் 10 மணியளவில் மன்னாரில் நினைவு கூறப்பட்டது.

மன்னார் நகரப் பகுதியில் உள்ள அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நினைவேந்தல் இடம் பெற்றது.

இதன் போது மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், கலையருவி இயக்குனர் அருட்–தந்தை செல்வநாயகம் அடிகளார், மன்னார் தமிழ் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# பாதுகாப்பாக கழிவுகளை அகற்றாத உணவகங்களது உரிமம் நிறுத்தப்படும்

## சாவகச்சேரி பொதுச் சுகாதார பரிசோதகர் தளிர்ராஜ் தெரிவிப்பு

**(த.சுபேசன்)**

பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றாத உணவகங்களின் வியாபார உரிமங்களை நிறுத்தி அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ் சாவகச்சேரி நகர உணவகங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள பல உணவகங்கள் கடந்த சில மாதங்களாக கழிவ



கற்றலுக்கான கட்டணங்களை சாவகச்சேரி நகரசபையில் செலுத்தவில்லை. இதன் காரணமாக உணவகங்களின் கழிவுகளை அகற்றும் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றாத உணவகங்களுடைய வியாபார உரிமம் நிறுத்தப்பட்டுச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் தரம் பிரித்துக் கட்டி வைக்கப்படும் கழிவுகள் மாத்திரமே நகர சபையால் அகற்றப்படும்.– என்றார்.

# ‘கையடக்க தொலைபேசிப் பாவனை’ விழிப்பணர்வு நாடகம் பட்டிருப்பில்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

‘கையடக்க தொலைபேசிப் பாவனை’ என்னும் தலைப்பிலான விழிப்பணர்வு நாடகம் களுவாஞ்சிகுடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவர்களால் காலை ஒன்றுகூடலின் போது அரங்கேற்றப்பட்டது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில பெரும் வரவேற்பை இது பெற்றுள்ளது.

இந்த விழிப்புணர்வு நாடகத்தில் நடித்த தரம் மாணவர்களுக்கும் நெறிப்படுத்திய வகுப்பாசிரியர் செல்வி.ப. டிசாந்தி அவர்களுக்கும் அதிபர் எம். சபேஸ்குமார் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் , பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

## கெஹலியவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு 8 ஆம் திகதி மாலை நடைபெறவுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## இந்திய இழுவை...

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இன்று காலை 10. 30 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் நிறைவில் கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு யாழ். மாவட்ட செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 154 கடற்றொழில் புரியும் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தக் குடும்பத்தினர் யாழ். மாவட்ட கடல் பகுதியில் தமது அன்றாட வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர்.

இந்தக் கடலை நம்பியே தமது குடும்ப வாழ்வை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், தற்போது இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையால் சொல்லொண்ணாத் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த காலங்களில், இலங்கை - இந்திய மீனவர்கள் பல்வேறு கட்டப் பேச்சுகளை பல்வேறு இடங்களில் மேற்கொண்டனர். இறுதியில் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ள.

இது தொடர்பாக பல்வேறு போராட்டங்களும் நடைபெற்றன. இவை தொடர்பாக எதுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே, இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய அடாவடித்தனமான தொழில் முறையை உடனடியாக நிறுத்தி எமது நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை அழித்தும், சூறையாடியும், எமது மீனவர்களின் தொழில் உபகரணங்களை அழித்துச் செல்வதையும் உடனடியாக தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த இழுவை மடித் தொழிலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் நாம் தொடர் போராட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என்பதையும் தங்களுக்குத் தயவுடன் அறியத் தருகின்றோம்.” - என்றுள்ளது.

## துன்புறுத்தலுக்கு...

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவரை அவரின் உறவினர்கள் பொறுப்பேற்றனர்.

பின்னணி

சரஸ்வதி தொடர்பான செய்தியை ஊடகங்கள் நேற்று வெளியிட்டிருந்தன.

சரஸ்வதி, இரத்தினபுரி மாவட்டம், எகலியகொட, பனாவல தோட்டத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இரு பெண் பிள்ளைகள் உட்பட மூன்று குழந்தைகள் உள்ளனர்.

வறுமை காரணமாக கடந்த ஜுலை 15 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றிருந்தார்.

அவர் வேலை செய்யும் வீட்டில், வீட்டுக்காரர்களால் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டிருந்தார். உணவுகூட முறையாக வழங்கப்படவில்லை எனவும் தமது குடும்பத்தாருக்கு அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனால் அவரின் தொலைபேசியும் வீட்டுக்காரர்களால் பறிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தன்னை எப்படியாவது காப்பாற்றுமாறு கண்ணீர்மல்க சரஸ்வதி இலங்கையர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் அழுது புலம்பும் காட்சி விழிநீரை பெருக்கெடுக்க வைக்குமளவுக்கு அமைந்திருந்தது.

இது தொடர்பான காணொலி வெளியான பின்னர், அவரை வேலைக்கு அனுப்பிய முகவர்கள், சவூதியில் உள்ள தமது நிறுவனத்துக்கு அழைத்துச் சென்றிருந்தனர். பிறிதொரு வீட்டில் வேலை பெற்றுத் தருவதாகவும் அவர்கள் கூறியிருந்தனர். எனினும், தான் நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று சரஸ்வதி தெரிவித்திருந்தார். இதன்படி அவருக்கான விமான ரிக்கெட்டும் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று காலை அவர் இலங்கை திரும்பியுள்ளார்.

## பிரபாகரனை...

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் (பண்டா - செல்வா) ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இந்த நாட்டில் பிரபாகரன் உருவாகியிருக்கமாட்டார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

“1956இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டது. இதற்கு வடக்கில் இருந்து எதிர்ப்புகள் வலுத்தன. சர்ச்சைகள் உருவாகின.

அதன்பின்னர் தமிழ் மொழியும் அரச மொழியாக்கப்பட்டது. செல்வா - பண்டா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முற்பட்ட போது இன்று போலவே அன்றும் மகா சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பண்டாரநாயக்கவின் வீடு சுற்றிவளைக்கப்பட்டது. இறுதியில் குறித்த ஒப்பந்தத்தைப் பண்டாரநாயக்க கிழித்தெறிந்தார். அந்த ஒப்பந்தம் நடைமுறையாகி இருந்தால் பிரபாகரன் உருவாகியிருக்கமாட்டார். நாட்டில் போரும் ஏற்பட்டிருக்காது. எனவே, பிக்குகளே பிரபாகரனை உருவாக்கினர். அதேபோல் டட்லி - செல்வா ஒப்பந்தத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.” - என்றார்.

புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு புதிய கூட்டணியை உருவாக்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் தாம் வெளிப்படையாக அழைப்பு விடுக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார். சக இடதுசாரி அரசியல் கட்சிகள் மற்றும் தமது கட்சியின் கொள்கைகளுடன் நெருக்கமாக செயற்படும் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தாம் அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா பொதுஜன பெரமுன தமக்குச் சவாலில்லை எனவும், அக்கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை எனவும் தெரிவித்தார்.

## அரச காணியை...

குறித்த பகுதிக்குச் சென்ற நிலையில் இயந்திரங்களைக் கைவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள அரச காணியை இனந்தெரியாத நபர்கள் சிலர் ஜே.சி.பி. இயந்திரங்களைப் பயன்படுத்தி காடுகளை அழித்து காணியைத் துப்புரவு செய்து கொண்டு இருக்கின்றனர் என்று இலுப்பைக்கடவைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தின் 541 ஆவது படைப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் இராணுவம் மற்றும் பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றனர்.

இதன்போது ஜே.சி.பி. இயந்திரங்களைப் பயன்படுத்தித் துப்புரவு செய்துகொண்டிருந்த நபர்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரைக் கண்ட நிலையில் அந்த இயந்திரங்களை அங்கேயே கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தநிலையில் காணியைத் துப்புரவு செய்யப் பயன்படுத்திய 3 ஜே.சி.பி இயந்திரங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## குழு மோதலில்...

மடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பதுளை, எகொடபிட்டிய, பத்தனேகெதர பகுதியில் இன்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தம்பகஹாவத்தை, கல்கொடுவேகம பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரரும் அவரது மனைவியும் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையைச் செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் சந்தேகநபர்கள் இருவர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## பஸ் கட்டணங்களும்...

அதிகரிக்கப்படவாய்ப்புள்ளதாகதேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டீசல் விலை உயர்வின் தாக்கம் 4 சதவீதத்திற்கு மேல் உள்ளதால், பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியிருக்கும் என்றும், கட்டணம் அதிகரிக்கப்படுமா இல்லையா என்பது குறித்த அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், எரிபொருள் விலை அதிகரிப்புக்கமைய பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உடைந்தது...

சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் 15 பேர் கடற்படை வைத்தியசாலையிலும் , 4 பேர் திருகோணமலை ஆதார வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கலிகமுவையிலிருந்து திருகோணமலை துறைமுகத்தைப் பார்வையிடுவதற்காகச் சுற்றுலா வந்தவர்களுக்கே இந்தக் கதி நடந்துள்ளது. இதில் பாடசாலை மாணவர்களே அதிகம் இருந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற கடற்பரப்பு ஆழமற்றதாக இருந்தமையால் பாரிய உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

## QR முறை...

காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அவர் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு அறிவித்தார்.

கடந்த காலத்தில் எரிபொருள் பற்றாக்குறை நிலவிய நிலையில் எரிபொருள் விநியோக வசதிக்காக QR முறை பயன்படுத்தப்பட்டு வந்தது.

அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் இன்று அறிவித்தமைக்கிணங்க, இன்று முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் QR முறை பின்பற்றப்படாது.



# கல்முனைத் தமிழ் மொழி தின போட்டி!

(வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை தமிழ் மொழி தினத்துக்கான கல்முனைக் கல்வி மாவட்ட தமிழ் மொழி தினப் போட்டி நேற்று (31) வியாழக்கிழமை சம்மாந்துறை அல்-மர் ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, மற்றும் திருக்கோவில் ஆகிய நான்கு கல்வி வலயங்களின் போட்டியாளர்கள் கலந்து கொள்ளும் இந்த மாவட்ட மட்ட போட்டியின் ஆரம்ப நிகழ்வு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது .

பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதம அதிதி தேசியக் கொடி ஏற்றியதும், சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனக சூரியத்துக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பாராட்டி வாழ்த்து மடலும், நினைவுச் சின்னமும் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



# போயா தினத்தில் சாராயம் விற்றார்: சந்தேகத்தில் குருநகரில் ஒருவர் கைது!

(நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மது பானங்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் சந்தேக நபர் ஒப்படைக்கப்பட்டார்.



போயா தினமான நேற்றுமுன் தினம் மதுபானங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 25 போத்தல் சாராயம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிங்களத்தின் அரூபத் திட்டம்

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' - என்பார்கள். இலங்கையின் தொல்லியல் திணைக்களம் எத்துணை தூரம் பௌத்த - சிங்களப் பேரினவாதம் சார்ந்தது, பக்கச் சார்பாக மட்டுமே - செயல்படுகின்றது என்பது இப்போது ஒரு தீர்ப்பு மூலம் நிரூபணமாகி இருக்கின்றது.

இலங்கை அரசின் ஒவ்வொரு கட்டமைப்பும் - குறிப்பாக சட்டம், ஒழுங்கைப் பேண வேண்டிய பொலிஸ் மற்றும் முப்படைகள் உட்பட - அரச இயந்திரத்தின் ஒவ்வொரு பிரிவும், மாறி மாறி வந்த அரசுகளின் கபடத் திட்டப் போக்கின் வழியில், பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மையை நிலை நிறுத்தும் பாகுபாட்டுச் செல்நெறியில்தான் செயற்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றது முல்லைத்தீவு நீதிவானின் நேற்றைய கட்டளை.

தொல்லியல் திணைக்களம் என்பது நாட்டின் தொன்மையான பண்பாட்டுக் கோலங்களை, அடையாளங்களை, புராதன சின்னங்களை உண்மைத் தன்மையுடன் வரலாற்று ரீதியாகப் பேண வேண்டிய மிக முக்கிய பிரிவு. அதுவும் உண்மை, நேர்மை, நீதி முறைமையுடன் வரலாற்று ஆதாரங்களைக் கோர்த்துச் செயல்பட வேண்டிய சுயாதீன கட்டமைப்பு. அப்படிச் செயற்பட்டால் தான் உண்மை வரலாறு உறுதியாகும். ஆனால் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மை வெறியுடன், மகாவம்ச மனவமைப்பிற்குள் சிக்கிக் கொண்டிருக்கும் சிங்கள தேசத்தின் பேரினவாதக் கட்டமைப்பாகவே அது செயல்படுகின்றது என்பதே தமிழர்களின் நீண்ட காலக் குற்றச்சாட்டு.

நாட்டின் தொன்மையின் உண்மையை - உயிர்ப்பை - வரலாற்றை - பேணுவதை விடுத்து, இலங்கைத் தீவு முழுவதும் சிங்கள - பௌத்தர்களின் தாயகம் என்ற வரலாற்று திரிவை நிலைநிறுத்தும் பக்கம் சார் கட்டமைப்பாகவே அது செயல்பட்டு வருகின்றது என்பது நீதிமன்ற தீர்ப்பினால் சட்டரீதியாகவும் இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வளவே.

குருந்தூர்மலையின் தரையில் தமிழர்கள் பொங்கல் நிகழ்வு ஒன்றை நீதிமன்ற அனுமதியுடன் செய்வதற்கு இதே தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட எடுப்புக்கள் பிரமிக்க வைப்பவை. நிலத்தில் பொங்கக்கூடாது, தரை மீது கல் வைத்து, கல்லின் மீது தகரம் வைத்து, அந்த தகரத்தில் கல்லடுப்பு செய்துதான் பொங்க வேண்டும், பொங்கல் அடுப்புக்கு வைக்கும் கற்கள் கூட அப்பகுதியில் இருந்து எடுக்கக் கூடாது, வெளியில் இருந்து கொண்டு வரப்பட வேண்டும் என்றெல்லாம் பெரிய அலப்பறை. பூசைப் பொருள்களை வைக்கவும், கொட்டவும் கூடக் கட்டுப்பாடு.

இவ்வளவு விதிமுறைகளையும் பொலிஸ் சகிதம் நின்று, கண்ணுக்குள் எண்ணை விட்டு அவதானித்து, பெரும் கெடுபிடியோடு நடைமுறைப்படுத்தியது தொல்லியல் திணைக்களம். இவையெல்லாம் அங்குள்ள தொன்மை அழிந்து விடாமல் பேணும் பாதுகாப்பு முன்னேற்பாடுகளாம்.

இவ்வளவற்றையும் நோண்டிக் கொண்டுதான், மறுபுறத்தில் பௌத்தக் ஆலய கட்டுமானப் பணியை நீதிமன்றத் தீர்ப்பைப் புறந்தள்ளி, தொல்லியல் மரபுகளைப் பேணுதல் என்ற முகமூடியை அணிந்தவாறு அந்த தொல்லியல் பிரதேசத்தில் முன்னெடுத்திருக்கின்றது தொல்லியல் திணைக்களம்.

குருந்தூர்மலையில் மட்டுமல்ல, வெடுக்குநாறிமலை, கன்னியா வெந்நீரூற்று போன்றவற்றிலிருந்து இருந்து தமிழரின் தாயகம் எங்கும் இத்தகைய பௌத்த சிங்கள மயப்படுத்தும் அரூபத் திட்டங்களையே, நடுநிலை நேர்மை யுடன் செயற்பட வேண்டிய தொல்லியல் திணைக்களம் பௌத்த - சிங்கள வெறிப்போக்கின் பக்கம் சாய்ந்து நின்று மேற்கொண்டு வருகின்றது.

அது மட்டுமல்ல, வன ஜீவராசிகள் திணைக்களம், வன வளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுச்சூழல் அதிகார சபை ஆகியவையும் கூட பொலிஸ் மற்றும் முப்படைகளுடன் சேர்ந்து இத்தகைய பௌத்தமயமாக்கல் என்ற அரூபத் திட்டத்தையே தமிழர் தாயகம் எங்கும் முழுமூச்சாக முன்னெடுத்து வருகின்றன. அதன் சிறிய வெளிப்பாடு மட்டும்தான் நேற்றைய தீர்ப்பு.



# தமிழ் மொழித்தின போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை வலய மட்ட , மாவட்ட மற்றும் கிழக்கு மாகாண மட்ட தமிழ் மொழித்தின போட்டிகளில் வெற்றியீட்டிய கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவர்கள் பழைய மாணவர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் இடம் பெற்ற தமிழ் தின போட்டிகளில் கல்முனை வலய மட்ட, மாவட்ட மட்ட மற்றும் கிழக்கு மாகாண மட்ட திறனாய்வு போட்டியில் தரம் 12 இல் கல்வி பயிலும் எம்.ஜே.எப்.அமானா வலய மற்றும் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தரம் 13 இல் கல்வி பயிலும் எஸ்.எச்.எப்.அமானா சிறு கதை எழுதுதல் போட்டியில் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், தரம் 4 இல் கல்வி பயிலும் எம்.எஸ்.எப்.இஸ்றத் கதை கூறுதல் போட்டியில் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றுப் பாடசாலைக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத் தந்த மாணவர்களை 2011 பழைய மாணவர் அணியினர் நினைவுச் சின்னம் மற்றும் பணப் பரிசல்கள் வழங்கி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர் எம்.ஏ. சலாம் , உதவி அதிபர் றினோஸ் ஹஜ்மீன் , ஆரம்ப பிரிவு பகுதி தலைவர் ஏ.ஸி.எம்.நஸீம் , தமிழ் பாட ஆசிரியைகள், பாடசாலை அபிவிருத்தி செயலாளர் எஸ்.எல்.ஹமீட் , பழைய மாணவர் சங்க செயலாளர் எம்க.ஐ.எம்.ஜிப்ரீ, 2011 பழைய மாணவர் அணியின் பிரதிநிதி பீ.எம். றுக்சான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மஸ்கெலியாவில் 250 குடும்பங்கள் சுத்தமான குடிதண்ணீர் இன்றி அவதி

மஸ்கெலியா குடா மஸ்கெலியா பிரதேசத்தில் 250 குடும்பங்கள் சுத்தமான குடி தண்ணீர் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

150 வருடங்களுக்கு முன்பு குடியேறிய சுமார் 60 குடும்பங்கள் அக் காலத்தில் சுத்தமான ஊற்று நீரை பாவித்து வந்தனர்.

காலம் கடந்த பின்னர் அந்த கிராமத்தில் பல குடும்பங்கள் குடியேறின. இவ்வாறான குடியிருப்புப் பகுதிகளுக்குச் சுத்தமான குடிதண்ணீர் இல்லை.

கடந்த சில மாதங்களாக இந்த பகுதியில் கடுமையான வெப்பமான காலநிலை தோன்றியுள்ளது. இதனால் இப்பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது.

மஸ்கெலியா தேசிய நீர் வடிகால் திணைக்களம் மூலம் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் தொகை குழாய்கள் குடா மஸ்கெலியா பிரதேசத்தில் களஞ்சிய படுத்தப்பட்ட நிலையில் உள்ளது.

இருந்த போதிலும் இன்று வரை அந்த பகுதிக்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் திணைக்களம் மூலம் குடிதண்ணீர் வழங்கவில்லை என புகார் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் உடன் கவனம் செலுத்தி இந்தக் கிராமத்தில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு தண்ணீர் வசதி செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# மட்டு. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக மீளாய்வு!

## அமைச்சர் பந்துல குணவர்தன பங்கேற்பு

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓகஸ்ட் மாதத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வியாழக்கிழமை (31) மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, கிழக்கு மாகாண ஆளுநரும், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான செந்தில் தொண்டமான், நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கமலத் அகியோர் பங்கேற்றனர்.

இதன் போது வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இதன்போது முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு இந்த மாவட்டத்தின் போக்குவரத்து, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல், மீன்பிடி, சட்டவிரோத மணல் அகழ்வு, யானை வேலி அமைத்தல், பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இறால் வளர்ப்பு திட்டம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையின் இடப் பற்றாக்குறை உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆரா யப்பட்டது.

அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பணிக்கப் பட்டது.

குறித்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அமைச்சர்களின் செயலாளர்கள், கிழக்கு மாகாண ஆளுநரின் பணிக் குழுவினர் உள்ளிட்ட உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், மற்றும் பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# விஷமிகளால் சேதமாக்கப்பட்ட மீனவர் சமாச அலுவலகம்!





(ஏ.எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டம், காரை தீவு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாளிகைக்காடு கடற்கரை வீதியில் அமைந்துள்ள மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகம் இனந்தெரியாத விஷமிகளால் தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் புதன்கிழமை (30) இரவு வேளை இடம்பெற்றுள்ளது.

அலுவலகக் கதவுகள், ஜன்னல்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. கதிரைகள், மேசைகள் உள்ளிட்ட தளபாடங்களும் உடைந்து சேதமடைந்துள்ளன.

அத்துடன் அலுமாரிகளில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சமாசத்துக்கான ஆவணங்களும் வெளியில் தூக்கி வீசப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அரசால் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட கட்டடத்தில் அமையப்பெற்றுள்ள குறித்த சமாசஅலுவலகம் அண்மைக் காலமாக எவ்வித செயற்பாடுமின்றி பூட்டிய நிலையில் காணப்பட்டது. இந்தக் கட்டடத் தொகுதியில் குற்றச் செயல்கள் இடம்பெறுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அதேவேளை, இப்பிரதேசத்தில் இயங்கி வரும் சில பொது அமைப்புகள் தமது செயற்பாடுகளுக்கு இக்கட்டடத்தை ஒதுக்கித் தருமாறு கோரிக்கைகளை விடுத்திருந்தன.

எனினும் சமாச நிர்வாகத்தினர் இக்-கட்டடத்தை ஒப்படைக்க முன்வரவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் பொதுத் தேவைகளுக்கு பயன்படக் கூடிய இந்தக் கட்டடம் சேதப்படுத்தப்பட்டிருப்பது குறித்து இப்பகுதி மீனவர்களும் பொது அமைப்பினரும் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

# பாலமுனை இளைஞர் கழகம் எல்லே மாவட்ட மட்டப் போட்டிக்கு!




(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தால் நடத்தப்படும் அட்டாளைச் சேனை பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லே போட்டியில் பாலமுனை இளைஞர் கழக அணி வெற்றி பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவை அதிகாரி பீ.எம்.றியாத் தலைமையில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாலமுனை இளைஞர் கழகம் 20 பந்துகளுக்கு 10 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்காக 11 ஓட்டங்களை நிர்ணயம் செய்தது.

பதிலளித்தாடிய பாலமுனை அல் அஸ்லம் இளைஞர் கழக அணி 7 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமையால் பாலமுனை இளைஞர் கழகம் வெற்றி பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

2007 ஆம் ஆண்டு எல்லே தேசிய மட்ட போட்டியில் பாலமுனை இளைஞர் கழகம் பங்கேற்று மூன்றாம் இடத்தைப் பெற்று சாதனையைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சித்தி விநாயகர் கலை மன்றத்தின் முத்தமிழ் விழா சாவகச்சேரியில் !







(த.சுபேசன்)

சாவகச்சேரி – பெரியமாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (29) இரவு சித்திவிநாயகர் கலை அரங்கத்தில் இடம்பெற்றன.

நிலையத்தின் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கமும், கௌரவ விருந்தினராக சங்கத்தானை ஜே–302 கிராம அலுவலர் ம.அமலதீபனும் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி பிரசாந்தினி நர்த்தன நாட்டியாலய மாணவிகளின் கண்ணன் நடனம், நடனமயில் விருது பெற்ற செல்வி க.பாரதியின் தனிநடனம், சிதம்பரநாதன் சுசீவனின் கூத்திசை, “திறந்த மனம்” எனும் தலைப்பில் நவராஜின் இயலுரை, சங்கீத ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி மற்றும் சங்கீத ஆசிரியை திருமதி மஞ்சுளா ஆகியோரின் கர்நாடக இசைக்கச்சேரி, பிரசாந்தினி நர்தன நர்தகிகளின் ருத்தவ சிவதாண்டவம்,சன் நாடகக் குழுவினரின் “என்னவென்று சொல் வேனடி” நாடகம், நிலைய உறுப்பினர் சி.சிவகரனின் இசை நிகழ்வு, செம்முகம் ஆற்றுகைக்குழுவின் சிவாஹாவின் கனிந்த இரவுகள் நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

அத்துடன் நிலையத்தின் மூத்த உறுப்பினர்களான மு.கதிரவேலு, க.சம்புலிங்கம், ச.விநாயகமூர்த்தி, ந.கிருஷ்ணநாதன், க.நவரத்தினம் மற்றும் கு.தவராசா ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

முத்தமிழ் விழாவை முன்னிட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், தமிழ் ஆசான் மார்க்கண்டு, கலை ஆர்வலர்கள், பொது மக்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பா.ஜ.க. நிச்சயம் தோற்கடிக்கப்படும்: 'இண்டியா' கூட்டத்தில் ஸ்டாலின் உறுதி




இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன்பு, நிச்சயமாக பா.ஜ.க .தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை என்று இண்டியா கூட்டணியின் இரண்டாம் நாள் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இண்டியா கூட்டணியின் இரண்டாம் நாள் ஆலோசனைக் கூட்டம் மும்பையில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. இதில், முதல் நிகழ்வாக தலைவர்கள் ஒன்றாக இணைந்து குழு புகைப்படங்களை எடுத்துக் கொண்டனர்.

இதனையடுத்து, ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது. இந்தக் கூட்டத்தில், தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில், இந்தியாவைக் காக்கப் போகும் இந்த இண்டியா கூட்டணியானது கடந்த மூன்று மாதங்களாக மிகுந்த ஒற்றுமையுடனும் கட்டுக்கோப்புடனும் செயல்பட்டு வருகிறது.

நமது கூட்டணியின் பலத்தைவிட, 'இண்டியா' என்ற பெயரே பாரதிய ஜனதா கட்சிக்குப் பயத்தையும் காய்ச்சலையும் உண்டாக்க விட்டது. அதனால்தான், நம் கூட்டணியைக் கொச்சைப்படுத்திப் பேசுவதையே பா.ஜ.கவினர் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் ஒன்று சேரமாட்டார்கள். ஒரே கூட்டத்தில் பிரிந்து விடுவார்கள் என பா.ஜ.க. நினைத்தது.

ஆனால், கூட்டணியாக இணைந்து, அதற்குப் பெயரும் சூட்டி மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தை நடத்திவிட்டோம் என்பது நம்முடைய உறுதியைக் காட்டுகிறது. வெற்றிப் பாதையில் நாம் பயணித்து வருகிறோம் என்பதன் அடையாளம் இது.

பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தி மதச் சார்பற்ற ஜனநாயகச் சக்திகளின் அரசை ஒன்றியத்தில் அமைப்பதே நமது அணியின் முழுமுதல் நோக்கமாகும். பா.ஜ.கவைத் தனிமைப்படுத்தும் வகையில், பா.ஜ.கவுக்கு எதிரான கட்சிகளை முடிந்தவரை இந்த அணியில் சேர்த்தாக வேண்டும். இதனை மனதில் வைத்து அனைத்துத் தலைவர்களும் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது கூட்டணி, இந்தியா முழுமைக்குமான கூட்டணி என்பதால் இதற்கு ஒருங்கிணைப்புக் குழுவையும், குறைந்தபட்ச செயல் திட்டத்தையும் உடனடியாக உருவாக்க வேண்டும். இண்டியா கூட்டணியின் முகமாக அந்த அறிக்கைதான் அமையும். நமது நாட்டை பா.ஜ.க. ஆட்சி பல்வேறு வகைகளில் சீரழித்துள்ளது. அதனை எப்படிச் சரிசெய்யப் போகிறோம் என்பதை நாட்டு மக்களுக்குச் சொல்வதற்கான அறிக்கையாக அது அமைய வேண்டும்.

ஒரு கட்சி ஆட்சி முடிந்து இன்னொரு கட்சியின் ஆட்சி என்பதாக இல்லாமல், எதேச்சாதிகார ஆட்சி முடிந்து, மக்களாட்சி மலரத் தேவையான கொள்கையின் மூலமாக மக்களிடையே நாம் நம்மை அடையாளப்படுத்த வேண்டும். நம்முடைய கூட்டணிக்கு இத்தகைய கொள்கைகள் தலைமை தாங்க வேண்டும்.

இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன்பு, நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கூட்டணி வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறவும் அடுத்த ஆண்டு இந்தியாவுக்கான ஒளிமயமான ஆண்டாக அமையவும் இப்போதே எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கேடு: எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் எந்தவொரு குற்றச்செயலிலும், ஏதாவது ஒரு ஆளும் கட்சிப் பிரமுகர் ஈடுபட்டுள்ளார் என செய்திகள் வருகின்றன.

தமிழகம் முழுவதிலும் மக்களிடையே அச்சமும், பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையும், முதல்வர் ஸ்டாலினின் திறமையின்மையால் ஏற்பட்டுள்ளது என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தி.மு.க. ஆட்சியில் தமிழகம் புதைகுழிக்குள் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு பல குற்ற நிகழ்வுகளை அடுக்கிக்கொண்டே போகலாம். யார் ஆட்சியில் இருந்தாலும், அங்கொன்றும், இங்கொன்றுமாக பிரச்சினைகள் ஏற்படுவதும், பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதும் இயல்பு. குறிப்பாக, அ.தி.மு.கவின் ஆட்சியிலும், அரசிலும் சமூக விரோதிகள், கூலிப் படையினர், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், சட்டவிரோத மதுபான வியாபாரிகள் போன்றோரின் அத்துமீறிய செயல்பாடுகள் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்பட்டு, சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது.

தற்போது நடைபெற்று வரும் எந்த ஒரு குற்றக் நிகழ்விலும், ஏதாவது ஒரு ஆளும் கட்சிப் பிரமுகர் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் மக்களிடையே அச்சமும், பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையும், இந்த பொம்மை முதல்வர் ஸ்டாலினின் திறமையின்மையால் ஏற்பட்டுள்ளது. இது, தமிழகத்தை தலைகுனிய வைத்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் சாதி, மத, இன மோதல்கள் இன்றி மக்கள் சகோதரத்துவத்துடன் இணக்கமாக வாழ்ந்து வந்தனர் என்று தெரிவித்துள்ளார்.

## 4 ஆம் திகதி அ.தி.மு.க. கூட்டம்!

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், எதிர்வரும் செப்டம்பர் 4 ஆம் திகதி மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழக முதல்வர் எடப்பாடி மு. பழனிசாமி தலைமையில், தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மாளிகையில், எதிர்வரும் திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பொறுப்புகளில் இருக்கும் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடகொரியா தொடர் ஏவுகணை சோதனை: கொரிய தீபகற்பத்தில் பெரும் பதற்றம்!





வடகொரியாவின் தொடர் ஏவுகணை சோதனை காரணமாக கொரிய தீப கற்பத்தில் பதற்றம் நிலவுகிறது என சர்வதேச ஊடககங்கள் தெரிவித்துள் ளன.

தங்களது நாட்டின் பாதுகாப்புக்காக தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் அமெரிக்காவுடன் இணைந்து போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இதனை பெரும் பாதுகாப்பு அச்சுறுத் தலாக கருதும் வடகொரியா இந்த பயிற்சிகளை உடனடியாக நிறுத்தும்படி முன்னதாக எச்சிரிக்கை விடுத்திருந்தது.

எனினும், தென்கொரியா தொடர்ந்தும் பயிற்சி மேற்கொண்டு வருகிறது.

இந்தநிலையில் தென்கொரியாவில் உள்ள இராணுவ நிலைகள் மற்றும் விமான நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துவதை போன்றும், போர் ஏற்பட்டால் தென்கொரிய எல்லைகளை எவ்வாறு ஆக்கிரமிப்பது குறித்தும் வடகொரியா ஒத்திகையை முன்னெடுத்து வருகின்றது.

இதற்காக 2 நவீன ஏவுகணைகளை வடகொரியா அனுப்பி சோதனை நடத்தி வருகின்றது.

வடகொரியாவின் இந்த செயலானது சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலாக மாறும் என தென்கொரியா தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## பிரித்தானிய பாதுகாப்புச்செயலாளர் பதவியை இராஜினாமா செய்தார்!



பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலாளர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்த நிலையில், தனது பதவி விலகல் கடிதத்தை பிரித்தானியாவின் பாதுகாப்புச்செயலர் பென் வாலேஸ், பிரதமர் ரிஷி சுனக்குக்கு அனுப்பிவைத் துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

நேட்டோ உச்சிமாநாடு ஒன்றில், உக்ரை னுக்கு ஆயுதங்கள் வழங்கிக்கொண்டே இருக்க, பிரித்தானியா ஒன்றும் அமேசான் நிறுவனம் அல்ல என்று பென் வாலேஸ் கூறியதைத் தொடர்ந்து பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

அத்துடன், அவரை நேட்டோவின் அடுத்த தலைவராக்க எடுக்கப்பட்ட பிரித்தானியாவின் முயற்சிகளும் தோல் வியில் முடிந்துள்ளன. இந்த கோடையில் அமைச்சரவையில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்த பென் வாலேஸ், நேற்று பிரதமர் ரிஷி சுனக்கிற்கு எழுதிய கடிதத்தில், நான் புறக்கணித்த வாழ்க்கையின் சில பகுதிகளில் முதலீடு செய்வதற்காகவும், புதிய வாய்ப்புகளை ஆராய்வதற்காகவும் பதவி விலகுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## உக்ரைனில் பிரித்தானிய நிறுவனம்!



பிரித்தானியாவின் பாதுகாப்பு நிறுவனமான பீ.ஏ.ஈ சிஸ்டம் உக்ரை னில் சட்டப்பூர்வமான முறையில் நிறுவனமொன்றை நிறுவியுள்ளது.

உக்ரைனின் தலைநகருக்கான ஆயுதங்கள் மற்றும் போர்ப்பயிற்சி பொருட்களுக்கான அதிகரிப்பை விஸ்தரிக்கும் நோக்கில் இந்த கிளை நிறுவப்பட்டுள்ளது.

பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் உக்ரைனுக்கு அனுப்பிய ஆயுதங்களை பீ.ஏ.ஈ சிஸ்டம் என்ற நிறுவனமே தயாரித்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக் கின்றன. குறித்த நிறுவனத்துடன் உக்ரைனிய ஜனாதிபதி ஒப்பந்தம் ஒன்றையும் கைச்சாத்திட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானின் இராணுவ சிப்பாய்கள் உயிரிழப்பு!

பாகிஸ்தானின் மேற்குப் பகுதியில் இராணுவ சிப்பாய்கள் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவ வாகனத்தின் மீது தற்கொலை குண்டுதாரி ஒருவர் உந்துரு ளியை மோதியுள்ளார்.

இதன்போது குறித்த வாகனம் தீப்பரவலுக்கு உள்ளான நிலையில் இராணுவ வாகனத்தில் இருந்த ஒன்பது சிப்பாய்களும் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.



# கிரிக்கெட் சுற்றும் சீருடை அறிமுகமும்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் இளம் முன்னணி வீரர்களை உள்ளடங்கிய சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் வட்ட அமைப்பினுடைய 4 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அமைப்பின் புதிய சீருடை அறிமுகமும் சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாய்ந்தமருது ஸஹ்ரியன் விளையாட்டுக் கழகம் மோதிய சிநேகபூர்வ கிரிக்கெட்டும் சாய்ந்தமருது பொது மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஈஸ்ட்டர்ன் பைட்டர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

20 ஓவர்களில் 8 விக்கெட்டை பறிகொடுத்து 199 என்ற இலக்கை எதிர் அணியினருக்கு நிர்ணயித்து இருந்தனர்.

இதில் என்.எம்.ஸஜீர் 39 ஓட்டங்களை 30 பந்துகளிலும் சஹீப் 33 ஓட்டங்களை 29 பந்துகளிலும் பெற்றுக் கொண்டனர் .

அதனை அடுத்துத் துடுப்பெடுத்தாடிய ஸஹ்ரியன் அணி 18.4 ஓவர்களில் 147 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து தோல்வியைத் தழுவ இந்தப் போட்டியின் கிண்ணத்தை ஈஸ்ட்டர்ன் பைட்டர்ஸ் அணியினர் தன்வசமாக்கிக் கொண்டனர்.

# நாம் எமக்குள் பிளவுபட்டதனால் தான் நாடு படுகுழிக்குள் தள்ளப்பட்டு விட்டது

## ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர் ரங்க பண்டார

(த.சுபேசன்)

நாம் எமக்குள் இன, மத, மொழி ரீதியாக பிளவுபட்டதன் விளைவுதான் இன்று எமது நாடு படுகுழிக்குள் தள்ளப்பட காரணம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற ஐ.தே.கட்சியினுடைய பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

ஐக்கிய தேசியக் கட்சி எந்தக் காலத்திலும் மக்களை ஒன்றிணைத்து வைத்திருக்க விரும்பும் ஒரு கட்சி. எமது கட்சி ஒருபோதும் இன, மத மற்றும் மொழி ரீதியாக எவரையும் பிரித்துப் பார்க்கவில்லை. 1946ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6 ஆம் திகதி டி.எஸ் சேனநாயக்க பௌத்த, இந்து, இஸ்லாம் என அனைவரையும் ஒன்றிணைத்தே ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கினார். சிறந்த தலைவராகவும் கட்சியை கொண்டு நடத்தினார்.

ஆனால் அதன் பின்னர் அரசியல்வாதிகள் தமது தேவைகளுக்காக



கட்சியைப் பிரித்துப் பார்த்தார்கள். பண்டாரநாயக்க பௌத்தம் சிங்கள வர்களுக்கு மாத்திரமே எனக் கூறி கட்சியை இரண்டாக பிரித்தார். அதனால் நாட்டில் குரோதம்,பொறாமை துளிர்விட்டது. அதன் பின்னர் தமிழர், முஸ்லிம் என தமது தேவைக்கு கட்சியை உருவாக்கினார்கள். கட்சிகள் மீண்டும் மீண்டும் பிளவுபட்டன.

ஒற்றுமையின் வலிமையை உணர்ந்தவர் எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க . அனைவரும் ஒன்று–பட்டால்தான் நாடு முன்னேறும் என அடிக்கடி கூறுவார். இந்த வார்த்தையை வெளிநாடுகளிலும் அவர் கூறுவார்.

கடந்த கால தலைவர்கள் இந்திய தலைவர் மோடியிடம் 13 இற்கும் மேலான ஒரு அமைப்பை வழங்குவோம் என கூறினார்கள். ஆனால் ரணில் விக்கிரமசிங்க இந்திய தலைவரிடம் 13 ஐ வழங்குவோம். ஆனால் பொலிஸ் அதிகாரத்தை வழங்கும் அதிகாரம் எனக்கு இல்லை. நாடாளுமன்றத்தில் தான் அந்த முடிவை எடுக்க வேண்டும் என கூறியுள்ளார். கடந்த கால தலைவர்கள் இங்கு ஒன்றும் வெளிநாடுகளுக்கு வேறொன்றும் கூறினார்கள்.ஆனால் இன்றைய ஜனாதிபதி மக்களுக்கு கூறுவதையே வெளிநாடுகளுக்கும் கூறினார்.

13 ஆவது திருத்தம் எப்படி அமைந்தாலும் வடக்கை முன்னேற்றப் பின்நிற்கப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறுவார். மக்களை பிரிக்காமல் நாட்டை முன்னேற்ற எமது ஜனாதிபதி செயலாற்றி வருகிறார்.

இன்று எதிர்ப்புக் காட்டுபவர்கள் வடக்கு–கிழக்குக்கு என்ன செய்தார்கள்? அவர்கள் தமது குடும்பங்களோடு சந்தோசமாக வாழ்கின்றனர். நீங்கள் வீதிகளில் போராடி கஷ்ரப்படுகிறீர்கள். எதிர்பைக் காட்டுபவர்கள் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கல்வி கற்பிக்கின்றனர். அவர்கள் சுகபோகங்களை அனுபவிக்கிறார்கள். இந்த மக்கள் இவ்வளவு காலமும் ஏமாந்து விட்டார்கள். ஏமாந்தது போதும். நாட்டுக்கு உகந்த தலைவரின் பின்னால் செல்ல வேண்டிய காலம் வந்து விட்டது. – என்றார்.